1982 பிப்ரவரி 8]

பட்சம் டவுன் பஞ்சாயத்தில் உள்ள மக்கள் வாங்குகிற கடன் 4 ஆயிரம், 5 ஆயிரம் என்று இருக்கின்றது. இந்த 26 ஆயிரம், 30 ஆயிரம் ரூபாய்கள் குறைந்த பட்சம் டவுன் பஞ்சாயத்துக்களுக்காவது விஸ்தரிக்கப்படுமா - அதே நேரத்தில் வடார்க்காடு மாவட்டத்தில் தற்போது வீடு கட்டுவதற்கு ஒதுக்கப்பட்ட கடன் தொகை ''அலாட்மென்ட்'' போதவில்லை என்ற காரணத்தினால் நிறுத்திவைக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால், இது குறித்து விரிவான பதிலை நான் தருகிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் சொல்லும்போது மொத்தமாக பணத்தைக் கொடுத்தால் செலவழித்துவிடுவார்கள் என்று சொன்னார்கள். ஆனால், பர்ஸ்ட் இன்ஸ்டால்மென்ட், செக்கண்டு இன்ஸ்டால்மென்ட், தேர்டு இன்ஸ்டால்மென்ட் என்று 4 ஆண்டுகளில் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிற காரணத்தினால், அவர்கள் வீட்டைப் பிரித்துப் போட்டுவிட்டு, பேஸ்மென்ட் அளவில் இன்றைக்கு கட்டிவிட்டு, அவஸ்தைப்படுவது அமைச்சருக்குத் தெரியுமா - அப்படி தெரிந்திருந்தால் அந்த பேஸ்மென்ட் வரை கட்டி இருப்பவர்களுக்காவது விரைவில் பணம் கொடுத்த அவர்கள் வீட்டைக் கட்டிக் கொள்வதற்கு அரசு உதவி செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறவர்களின் பட்டியலை அரசுக்குக் கொடுத்தால் அதைப் பற்றி ஆவன செய்ய அரசு முயற்ச்சிக்கும்.

ஆவுடையாபுரம் நக்சகலக்கோட்டை கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

***வினா எண் 95—திரு. மு. சுந்தரராஜன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) விருதுநகர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆவுடையாபுரம் , நக்கலக்கோட்டை ஆகிய கிராமங்களில் தற்சமயம் வழங்கப்படும் குடிதண்ணீரைப் பருகினால் நீர்கட்டு, யானைக்கால் போன்ற வியாதிகள் ஏற்படுவதாக புகார் செய்யப்பட்டு வாரிய அதிகாரிகள் சோதனைக்காக எடுத்துச் சென்றுள்ளது இந்த அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அப்படியானால் அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) ஆவுடையாபுரம் மற்றும் நக்கலக்கோட்டை ஆகிய சிற்றூர்களில் உள்ள குடிநீர் ஆதாரங்கள் அனைத்திலும் மாதிரி நீர் எடுத்து பரிசோதனை செய்து பார்த்ததில் ஆவுடையாபுரத்தில் உள்ள நான்கு நீர் ஆதாரங்களும் குடிக்கத் தகுதியற்றவை எனவும், நக்கலக்கோட்டையில் உள்ள மூன்று நீர் நிலைகளில் இரண்டில் நல்ல குடிநீர் உள்ளதெனவும் அறியப்பட்டது. ஆவுடையாபுரத்தில் உள்ள எல்லா நீர் ஆதாரங்களும் குடிக்கத் தகுதியற்றவையாகவிருப்பதால் மாற்று நீர் ஆதாரம் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. நக்கலக்கோட்டை சிற்றூரைப் பொருத்தவரை மூன்றாவது கட்டத்தில்,வருகின்ற ஆண்டில் விருது நகர் ஊராட்சி ஒன்றியம் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது. அப்போது மேற்கொண்டு குடிநீர் வசதி செய்வது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

மழை அளவைக் கருவிகள்.

***வினா எண் 96.—** திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மழை அளவைக் கருவிகளை (Rain gauge) பிர்க்கா மையங்களில் வைத்து மழை கணக்குகள் பதியும் திட்டம் அரசிடம் இருக்கின்றதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இல்லை. ஆனால் ஏற்கெனவே, தமிழ்நாடு முழுவதிலும் குறிப்பிட்ட 685 இடங்களில் மழை அளவைக் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை மத்திய மாநில அரசுத் துறைகளால் நிறுவப்பட்டவை. ஆய்வுப் பணிகளுக்கு இவை போதுமானவை.

திருமதி தா. இராசாம்பாள் : தலைவர் அவர்களே, பிர்க்கா மையங்களில் மழைக் கணக்குகள் பதியும் திட்டம் அரசிடம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இனிமேலாவது அப்படி வைக்க இந்த அரசு முன் வருமா என்று கேட்க விரும்புவதோடு, விவசாயிகளோடு தொடர்புடைய மின் சார வாரியம், விவசாயத் துறை ஆகிய துறைகளும் தன்னுடைய விவசாய சேவையைக் கருதி இந்தத் மழைக் கணக்குகள் பதியும் கருவிகளை வைத்துக் கணக்குகளை எடுத்து, முன்கூட்டியே திட்ட மிட்டு விவசாயிகளுக்கு உதவ ஒரு ஒருங்கிணைந்த நடவடிக்கையை மிடுக்க அரசு முன் வருமா என்றும் கேட்க விரும்புகிறேன்.